# Tnpsc Group 4 General Tamil Model Test - Part 9

## More Pdf Link: https://wp.me/p7JanY-cpU

## 6th Tamil Unit 2 Questions

61. வழி + தடம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________________.

A) வழிதடம்

**B) வழித்தடம்**

C) வழிதிடம்

D) வழித்திடம்

62. சிட்டுக்குருவி வாழ முடியாத பகுதி _____________________.

**A) துருவப்பகுதி**

B) இமயமலை

C) இந்தியா

D) தமிழ்நாடு

63. கிழவனும் கடலும் ( The Oldman and the Sea ) என்னும் ஆங்கிலப் புதினம் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு படக்கதையாக இங்குச் சுருக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நூல் _____________ ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்றது. இந்நூலின் ஆசிரியர் __________________________ ஆவார்.

A) 1934, ஜான் வெல்

B) 1944, மிட்செல்

**C) 1954, எர்னெஸ்ட் ஹெமிங்வே**

D) 1964, டார்வின்

63. கிழவனும் கடலும் ( The Oldman and the Sea ) என்னும் புதினம் பற்றிய சரியான கூற்று எது?

I. இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையே நடக்கும் போராட்டமே இந்தக் கதை. இக்கதையின் நாயகன் சாண்டியாகோ. வயது முதிர்ந்த மீனவர் அவர். முன்பெல்லாம் கடலுக்குச் சென்றால் மீன் இல்லாமல் திரும்பமாட்டார்.

II. ஆனால், கடந்த எண்பத்து நான்கு நாள்களாக ஏனோ அவருக்கு ஒரு மீனும் கிடைக்கவில்லை.

III. மனோலின் என்னும் சிறுவன் மீன்பிடிக்கக் கற்றுக்கொள்வதற்காக முதல் நாற்பது நாள்களும் அவருடன் கடலுக்கு வந்தான். அவன், அவருக்கு வேண்டிய உதவிகள் செய்ததோடு பேச்சுத்துணையாகவும் இருந்தான்.

IV. அவரோடு கடலுக்குப் போனால் ஒரு மீனும் கிடைப்பதில்லை என்று அவனை வேறு படகிற்கு அனுப்பிவிட்டனர் அவனது பெற்றோர்.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

64. கிழவனும் கடலும் ( The Oldman and the Sea ) என்னும் புதினத்தில், சாண்டியாகோ – விற்கு எப்போது மீன் கிடைத்தது?

A) அறுபத்து ஐந்தாவது நாள்

B) எழுபத்து ஐந்தாவது நாள்

**C) எண்பத்து ஐந்தாவது நாள்**

D) தொண்ணூற்றி ஐந்தாவது நாள்

65. எழுத்துகள் _______________ வகைப்படும்.

A) ஐந்து

B) நான்கு

**C) இரண்டு**

D) மூன்று

**(குறிப்பு – எழுத்துகள் இரண்டு வகைப்படும். 1. முதல் எழுத்துகள் 2. சார்பு எழுத்துகள்)**

66. முதல் எழுத்துகள் எத்தனை வகைப்படும்?

A) 10

B) 12

C) 18

**D) 30**

**(குறிப்பு – முதல் எழுத்துகள் : உயிர் எழுத்துகள் பன்னிரண்டு, மெய்யெழுத்துகள் பதினெட்டு ஆகிய முப்பது எழுத்துகளும் முதல் எழுத்துகள் ஆகும். பிற எழுத்துகள் தோன்றுவதற்கும் இயங்குவதற்கும் முதற்காரணமாக இவை இருக்கின்றன. எனவே இவற்றை முதல் எழுத்துகள் என்பர்.)**

67. சார்பு எழுத்துகள் ______________ வகைப்படும்.

A) 2

B) 5

C) 8

**D) 10**

**(குறிப்பு – சார்பு எழுத்துகள் : முதல் எழுத்துகளைச் சார்ந்து வரும் எழுத்துகள் சார்பெழுத்துகள். இவை பத்து வகைப்படும். 1. உயிர்மெய்; 2. ஆய்தம்; 3. உயிரளபெடை; 4. ஒற்றளபெடை; 5. குற்றியலிகரம்; 6. குற்றியலுகரம்; 7. ஐகாரக்குறுக்கம்; 8. ஔகாரக்குறுக்கம்; 9. மகரக்குறுக்கம்; 10. ஆய்தக்குறுக்கம்)**

68. உயிர்மெய் – பற்றிய சரியான கூற்று எது?

I. மெய் எழுத்துகளும் உயிர் எழுத்துகளும் ஒன்றுடன் ஒன்று சேர்வதால் உயிர்மெய் எழுத்துகள் தோன்றுகின்றன.

II. உயிர்மெய் எழுத்தின் ஒலிவடிவம் மெய்யும் உயிரும் சேர்ந்ததாக இருக்கும்.

III. வரிவடிவம் மெய்யெழுத்தை ஒத்திருக்கும். ஒலிக்கும் கால அளவு உயிர் எழுத்தை ஒத்திருக்கும்.

IV. முதல் எழுத்துகளைச் சார்ந்து வருவதால் இவை சார்பெழுத்து வகையுள் அடங்கும்.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

69. ஆய்தம் எழுத்து பற்றிய சரியான கூற்று எது?

I. மூன்று புள்ளிகளை உடைய தனித்த வடிவம் பெற்றது. முப்புள்ளி, முப்பாற்புள்ளி, தனிநிலை, அஃகேனம் என்ற வேறு பெயர்களும் இதற்கு உண்டு.

II. நுட்பமான ஒலிப்புமுறையை உடையது.

III. தனக்குமுன் ஒரு குறில் எழுத்தையும் தனக்குப்பின் ஒரு வல்லின உயிர்மெய் எழுத்தையும் பெற்றுச் சொல்லின் இடையில் மட்டுமே வரும்.

IV. தனித்து இயங்காது. முதல் எழுத்துகளாகிய உயிரையும், மெய்யையும் சார்ந்து இயங்குவதால் ஆய்த எழுத்து சார்பெழுத்து ஆகும்.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

70. கீழ்க்கண்ட கூற்றில் சரியானது எது?

I. முதல் எழுத்துகள் மட்டும் இடம்பெறும் சொல் – ஆம்.

II. முதல் எழுத்துகள் இடம்பெறாத சொல் – குருவி.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

**C) I, II இரண்டுமே சரி**

D) I, II இரண்டுமே தவறு

71. இயல்பாகவே தோன்றி மறையும் பொருள்கள், அவற்றின் இயக்கம், அவை இயங்கும் இடம், இயங்கும் காலம் அனைத்தும் ஒன்றிணைந்ததே _______________ என்கிறோம்.

A) செயற்கை

B) அழகு

**C) இயற்கை**

D) இவற்றில் ஏதுமில்லை

72. தொடர்களைப் பிரித்து இரண்டு தொடர்களாக உள்ளது, சரியானவற்றைத் தேர்ந்தெடு.

I. பல நாள்களாக மழை பெய்யாததால் பயிர்கள் வாடின.

விடை: பல நாள்களாக மழை பெய்யவில்லை. பயிர்கள் வாடின.

II. கபிலன் வேலை செய்ததால் களைப்பாக இருக்கிறான்.

விடை: கபிலன் வேலை செய்தான். களைப்பாக இருக்கிறான்.

III. இலக்கியா இனிமையாகப் பாடியதால் பரிசு பெற்றாள்.

விடை: இலக்கியா இனிமையாகப் பாடினாள். பரிசு பெற்றாள்.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) III மட்டும் சரி

**D) I, II, III அனைத்தும் சரி**

73. கலைச் சொல் அறிவோம் – சரியானவற்றைத் தேர்ந்தெடு.

I. கண்டம் – Continent

II. தட்பவெப்பநிலை – Climate

III. வானிலை – Weather

IV. வலசை – Migration

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) III, IV மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

74. கலைச் சொல் அறிவோம் – சரியானவற்றைத் தேர்ந்தெடு.

I. கண்டம் – Continent

II. புகலிடம் – Sanctuary

III. புவிஈர்ப்புப்புலம் – Gravitational Field

IV. வலசை – Migration

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) III, IV மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

75. அறநூல்களில் 'உலகப் பொது மறை' என்று போற்றப்படும் சிறப்புப் பெற்ற நூல் எது?

**A) திருக்குறள்**

B) நான்மணிக்கடிகை

C) இன்னா நாற்பது

D) திரிகடுகம்

76. ஏழு சொற்களில் மனிதர்களுக்கு அறத்தைக் கற்றுத்தரும் நூல் எது?

**A) திருக்குறள்**

B) நான்மணிக்கடிகை

C) இன்னா நாற்பது

D) திரிகடுகம்

77. _______________ எழுத்துகளுக்குத் தொடக்கம்.

A) அந்தாதியே

B) அந்தமே

C) ஆதியே

**D) அகரமே**

78. கீழ்க்கண்டவற்றுள் திருக்குறள் உடன் பொருந்தியது எது?

I. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு – கடவுள் வாழ்த்து

II. விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து உள்நின்று உடற்றும் பசி – வான் சிறப்பு

III. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர் செயற்கரிய செய்கலா தார் – நீத்தார் பெருமை

IV. தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கு எல்லாம் இனிது – மக்கட்பேறு

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) III, IV மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

79. கீழ்க்கண்டவற்றுள் திருக்குறள் உடன் பொருந்தியது எது?

I. ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய் – மக்கட்பேறு

II. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை – வான் சிறப்பு

III. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு – அன்புடைமை

IV. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு அணியல்ல மற்றுப் பிற – இனியவை கூறல்

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) III, IV மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

80. கீழ்க்கண்டவற்றுள் திருக்குறள் உடன் பொருந்தியது எது?

I. ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய் – மக்கட்பேறு

II. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை – வான் சிறப்பு

III. இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக் காய்கவர்ந் தற்று – இனியவை கூறல்

IV. அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு – அன்புடைமை

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) III, IV மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**